**இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரி – 2017**

---

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த இரத்மலானை பல்கலைக்கழக் கல்லூரியின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிகர சொத்து மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டவாக்கத்தின் 17(2) ஆம் பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த இரத்மலானை பல்கலைக்கழகக் கல்லூரியின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றலும் காசுப் பாய்ச்சலும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016, 2017 ஆம் ஆண்டுகளில் மூலதன மானியத்தின் கீழ் ஊழியர்களது ஆற்றலைக் கட்டியெழுப்பு (Capacity Building) வதற்கு கல்லூரிக்குக் கிடைக்கப் பெற்று செலவழிக்கப்பட்ட ரூபா 1,589,998 கூட்டுத் தொகையை ஒவ்வொரு ஆண்டினதும் மீண்டுவரும் வருமானமும் செலவினமுமாகக் கணக்கிலிடுவதற்குப் பதிலாக மூலதன மானியக் கணக்கில் செலவு வைத்து சொத்து, பொறித்தொகுதி, உபகரணங்களின் கீழ் ஆற்றலைக் கட்டியெழுப்புவதாக வரவு வைத்ததன் காரணமாக அக்கணக்கு அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி மேலதிகப்பற்று ரூபா 5,177,107 ஆகும். எனினும், அம் மீதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்படாமல் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் எதிர்மறை மீதியாகக் காட்டப்படடிருந்தது.

(இ) கணக்காய்வினது கணிப்பின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதன மானியக் கணக்கு மீதி ரூபா 295,549,228 ஆகவிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அம் மீதி ரூபா 323,848,000 ஆகக் காட்டப்பட்டிருந்தது. வித்தியாசத் தொகையான ரூபா 28,298,772 நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் பிற்போட்ட வருமானமாகக் காட்டப்பட்டு நிதி நிலைமைக் கூற்று கணக்கிணக்கஞ் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது நூலக மற்றும் ஆய்வுகூட வைப்பாக ரூபா 5,000 வீதப்படி 245 மாணாக்கரிடமிருந்து சேகரிக்கப்பட்டு சேமிப்புக் கணக்கொண்றிலிடப்பட்ட ரூபா 1,225,000 கணக்கிலிடப்படவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் தாபன விதிக் கோவையினது XIV அத்தியாயத்தின் 4 ஆம் பந்தி | பயிற்சிக் கற்கை நெறிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு தாபன விதிக் கோவையின் 4.1.1 ஆம் பந்தியின் பிரகாரம் சீவனப் படியும் பயணச் செலவினமும் வழங்கப்படுவதற்குப் பதிலாக 03 சந்தர்ப்பங்களில் உணவு மற்றும் தங்குமிட வசதிக்காக செலவிடப்பட்ட ரூபா 38,269 மீள வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 381 ஆம் நிதிப் பிரமாணம் | உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினூடாக அரச கணக்குத் திணைக்களத்திடம் விண்ணப்பிக்கப்பட வேண்டுமாயினும், கல்லூரி அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாது மாணாக்கரிடமிருந்து பெறப்பட்ட நூலக மற்றும் ஆய்வுகூட வசதி வைப்புக்கென வேறொரு கணக்கை ஆரம்பித்திருந்தது. |
| **(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | |
| (i) 7.4.5 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் பொருட்டான கல்லூரியினது நிலையான சொத்துக்கள் சம்பந்தமான பொருட் கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை. |
| (ii) 8.10(இ) பிரிவு | 2017 டிசெம்பர் மாதத்தில் கல்லூரி ரூபா 884,029 க்கான வங்கி மேலதிகப் பற்று வசதிகளைப் பெற்று அதன் பொருட்டு மேலதிகப் பற்று வட்டியாகச் செலுத்திய தொகை ரூபா 1,732 ஆகும். எனினும், சுற்றறிக்கைப் பிரகாரம் கடனுக்கான வரம்பு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய தொழில்சார் தகைமை (NVQ) 5.6 மட்டத்திலான டிப்ளோமா கற்கை நெறியை நடாத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட இக் கல்லூரியானது முறையான அங்கீகாரமின்றி பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு மற்றும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) 07 கற்கை நெறிக்கென வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் வெளி விரிவுரையாளர்களுக்கான விரிவுரைக் கட்டணம், மாணாக்கரது கேள்வித் தாள் தயாரிப்புக்கான கட்டணம் மற்றும் நிறைவேற்று தரத்தைச் சேர்ந்தவர்களதும் நிறைவேற்று தரத்தைச் சேராதவர்களதும் ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சைகளுக்கான கட்டணமுமாக ஆண்டின்போது மொத்தமாக ரூபா 1,598,025 கொடுப்பனவு செய்திருந்தது.

(ஆ) கொடுப்பனவிற்கு முறையான விதி முறைகளை அங்கீகரித்துக் கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை மாத்திரமே பெற்று கேள்வித் தாள்களைத் தயாரித்தல், விடைத்தாள்களுக்குப் புள்ளி வழங்குதல், பரீட்சைக் கடமைகள் என்பவற்றிற்கு மீளாய்வாண்டில் பதவியணியினருக்குக் கொடுப்பனவு செய்த தொகை ரூபா 975,400 ஆகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கல்லூரியின் நிதிப் பெறுபேறு ரூபா 8,511,971 பற்றாக்குறை ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 529,712 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 9,041,683 நலிவு தென்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ஊழியர் கிரயம் ரூபா 10,643,215 அதிகரித்ததும் சேவைகளுக்கான செலவினம் ரூபா 4,079,118 அதிகரித்ததும் மேற்படி நலிவுக்கான பிரதான காரணமாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2017 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட பொருட் கொள்வனவுத் திட்டத்திலிருந்து விலகியவாறு ரூபா 6,668,815 பெறுமதியான உபகரணங்களையும் சேவைகளையும் கல்லூரி பெற்றிருந்தது. இதன் மூலம் பொருட் கொள்வனவுத் திட்டம் முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

#### 4.1.2 நடவடிக்கைகளும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்லூரியில் நடைபெறும் 10 கற்கை நெறிகளில் ஏறக்குறைய 300 மாணாக்கரைச் சேர்த்துக் கொள்ளக்கூடியதாகவிருந்தும் மீளாய்வாண்டில் 245 மாணாக்கர் மாத்திரமே ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதில் 38 மாணாக்கர் கற்கை நெறிகளிலிருந்து நீங்கியிருந்தனர்.

(ஆ) இரு கற்கை நெறிகளைத் தவிர ஏனைய 08 கற்கை நெறிகளுக்கும் தலா இரு விரிவுரையாளர் வீதம் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின்போது வெளிவிரிவுரையாளர்களுக்கு ரூபா 2,425,050 செலவிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் வெளியிடப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய சில பாடங்களில் மாணாக்கர் சித்தியெய்திய சதவீதத்தில் குறைவு அவதானிக்கப்பட்டதுடன், தெரிவுச் செவ்வைகளின் பிரகாரம் 20 பாடங்களில் 10 முதல் 66 சதவீதமான சித்திகளையே மாணாக்கர் பெற்றிருந்தனர்.

(இ) நிபுணத்துவத்துறை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 10 பணிகளுக்காக 02 சந்தர்ப்பங்களில் ரூபா 29 மில்லியன் கூட்டுத ் தொகையுடைய நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதும், ஆண்டின்போது ரூபா 15,669,696 மாத்திரமே செயற்திட்டத்திடமிருந்து பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2 பணிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியை விட கூடுதலான செலவினம் மேற்கொள்ளப்பட்டு, ரூபா 1,450,000 செலவில் கணக்கீட்டு மென் அணியைக் கொள்வனவு செய்வதற்கும் பாதுகாப்பின்றி இருந்த கல்லூரியினது கட்டிட சீலிங்கைத் திருத்துவதற்குத் திட்டமிட்டிருந்தபோதும் அப்பணிகள் நடைபெறவில்லை.

(ஈ) கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது 18 பாடங்களுக்குத் திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களில் 18 முதல் 45 சதவீதம் வரையான விரிவுரை மணித்தியாலங்களே நிறைவேறியிருந்தமை தெரிய வந்தது. அதற்கமைய, கற்கை நெறிகளுடன் தொடர்புடைய சில பாடங்கள் (Module) சம்பந்தமாக நிறைவேற்றப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களை விரிவுரையாளர்கள் நிறைவேற்றியிராமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின்போது வெளியக விரிவுரையாளர்களுக்கு 664 விரிவுரை மணித்தியாலங்கள் வழங்கப்பட்டு அதன் பொருட்டு ரூபா 795,050 செலவிடப்பட்டிருந்தது. திட்டமிட்டவாறு விரிவுரை மணித்தியாலங்கள் நிறைவேற்றப்படாமையால் பாடங்கள் சம்பந்தமாகப் போதிய அறிவை மாணாக்கர் பெற்றிருந்தனரா என்பதும் கற்கை நெறிகளது திறனும் கணக்காய்வில் சர்ச்சைக்குரியதானது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிபுணத்துவத் துறை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் மாணாக்கரிடையே விநியோகிப்பதற்காக 2015 ஏப்ரல் 27 ஆந் திகதி கல்லூரிக்கு வழங்கப்பட்ட ரூபா 449,938 பெறுமதியான 737  டீ சேர்ட்களில் ரூபா 205,738 பெறுமதியான 337 டீ சேர்ட்கள் கணக்காய்வுத் தினமான 2018 பெப்ரவரி 26 ஆந் திகதியவிலும் விநியோகிக்கப்படாது களஞ்சியத்தில் இருந்தன.

(ஆ) கல்லூரி மாணாக்கரது பாட நிறைவில் நடாத்தப்படும் பரீட்சைகளது பெறுபேறுகளை குறைந்தது ஒரு மாதத்திற்குள் பெளியிடுவதற்குத் திட்டமிட்டிருந்தபோதும், 2016 ஆம் 2017 ஆம் ஆண்டுப் பரீட்சைகளது பெறுபேறுகளை திட்டமிட்ட திகதியில் வெளியிடுவதற்குக் கல்லூரியின் பணிப்பாளர் சபை தவறியிருந்தது. பெறுபேறுகளில் 03 முதல் 12 மாத கால தாமதம் நிலவியது. கணிப்புச் சபை அங்கத்தவர்களால் விடைத்தாள்கள் பரிசீலிக்கப்பட்டு திருப்பி ஒப்படைக்கப்படுவதில் நீண்ட தாமதம் நிலவியமை அதந்கான காரணமாகும். தெரிவுச் செவ்வைகளின் பிரகாரம் கணக்காய்வுத் தினமான 2018 மார்ச் 31 ஆந் திகதியளவில் அத்தாமதம் 03 முதல் 08 மாதங்களாக இருந்தன. எவ்வாறாயினும், விடைத் தாள்களைத் திருத்துவதற்கு உள்ளக விரிவுரையாளர்களுக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அக்காலப்பகுதியின்போது விரிவுரையாளர்களுக்கு உத்தியோகபூர்வ விடுமுறையும் வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டில் தொலைந்து போன ரூபா 125,000 பெறுமதியான டிஜிடல் மல்டி மீட்டரின் நட்டம் ரூபா 102,908 ஆகும். இதனை அறவிடுவதற்கு முகாமைத்துவம் இதுவரை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) கல்லூரி இயங்கும் பெரிய அளவிலான 03 றூட், 3.9 பர்ச்சஸ் காணியின் சட்டபூர்வ உரித்தை மீளாய்வாண்டு இறுதியிலும் கல்லூரி சுவீகரிப்பதற்கோ அல்லது அதன் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கிலிடுவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**4.3 பதவியணி நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்லூரியின் பிரதான நிறைவேற்றுதர உத்தியோகத்தர் மற்றும் பயிலுநர் விரிவுரையாளர் பதவிகளைத் தவிர ஏனைய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிராததுடன், தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய ஆட்சேர்ப்பு நடைபெற்றிருந்தது. எனினும், தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையிலும் உள்ளடங்காத ஆங்கில ஆசிரிய மதிவுரையாளர் மற்றும் பராமரிப்புத் தொழில்நுட்பம் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு நடைமுறையிலிருந்து விலகியவாறு 02 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய கல்லூரியின் 04 உத்தியோகத்தர்களது தகைமைகளை குறித்த நிறுவனங்களிலிருந்து உறுதி செய்து கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய, பயிலுநர் விரிவுரையாளர்களை ஆட்சேர்க்கும் போது படிப்பிக்கும் பாடம் சம்பந்தமாக முதலாந்தர அல்லது இரண்டாந்தர அதியுயர் சித்தியிருத்தல் அல்லது குறித்த பாடத்துறைக்கு புறம்பாகவிருக்குமிடத்து பாடத்துறைக்குரிய ஆராய்ச்சிக் கட்டுரையுடன் 02 ஆண்டுகால் பட்டப்பின் படிப்பு இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மின்சாரத் தொழில்நுட்பவியல், ரூபலாவண்யம் அல்லது ரூபவாஹினி நிகழ்ச்சித்திட்டத் தொழில்நுட்பம் ஆகிய கற்கை நெறிகளுக்கு மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் குறித்த பாடத்துறை அல்லாத பட்டப்படிப்பை உடைய 04 விரிவுரையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தபோதும், அவ்விரிவுரையாளர்கள் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கேற்ப இருக்க வேண்டிய பட்டப்படிப்புத் தேவையைக் கொண்டிருக்கவில்லை.

(ஈ) தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் (Telecommuniction Technology) கற்கை நெறிக்கு 2016 யூன் 01 ஆந் திகதி ஆட்சேர்க்கப்பட்ட வெளிநாட்டுப் பட்டப்படிப்பை உடைய விரிவுரையாளர் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கேற்ப இருக்க வேண்டிய தகைமைகளைக் குறித்த பட்டப்படிப்பு நிறுவனத்தினூடாக உறுதி செய்திருக்காததுடன், அப்பல்கலைக்கழகம் பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமா என்பதும் உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) உணவுத் தொழில்நுட்ப (Food Technology) கற்கை நெறிக்கு 2014 நவெம்பர் 01 ஆந் திகதி ஆட்சேர்க்கப்பட்ட விரிவுரையாளர் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கேற்ப இருக்க வேண்டிய தகைமைகளை உறுதி செய்தமை தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) கல்லூரியின் பெண் விரிவுரையாளர் ஒருவர் பட்டப்பின் படிப்பைப் பயிலுவதற்காக வெளி நாடு சென்றுள்ளதுடன், அவ்வுத்தியோகத்தருக்கு ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் கற்கை நெறிக்கான கட்டணமாக ரூபா 40,000 கல்லூரியால் செலுத்தப்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், வெளி நாடு செல்லும் சந்தர்ப்பத்தில் அவ்வுத்தியோகத்தர் அக்கற்கை நெறியை நிறைவு செய்திராததால், அத் தொகையை அறவிடுவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவுமில்லை.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல நோக்கத்தை அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரின் கடிதம் மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் செயலாற்ற வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் கல்லூரி தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் தொடர்பாக எவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை அறிந்திராமையால் நிலைத்து நிற்கவல்ல நோக்கம், இலக்கு, அவ்விலக்கை நோக்கிய பணிகள், இலக்கை அளவிடுதல் சுட்டிக் காட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் குழு ஒன்று நிறுவப்படவில்லை.

### 6.2 பொருட்கொள்வனவும் ஒப்பந்தச் செயற்பாடுகளும்

#### 6.2.1 பொருட் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய, போட்டியுடனான அடிப்படையில் கூறு விலைகளைக் கோரும் போது கூறுவிலைகளைப் பெறுவதற்கு குறைந்தது 21 தினங்கள் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2017 ஏப்ரல் 09 ஆந் திகதியன்று கல்லூரிக்கு தளபாடங்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்கு பிரசுரிக்கப்பட்ட பொருட் கொள்வனவு அறிவித்தலில் அக்காலப்பகுதி 19 நாட்களாகக் குறிப்பிடப்பட்டிருந்ததால் மீண்டும் அத்திகதியைத் திருத்தஞ் செய்து புதினப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதற்கு ரூபா 15,425 பயனற்றவாறு செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.6 ஆம் பந்தியின் பிரகாரம் கூறு விலைகளைக் கோரும் ஆவணங்களில் மாதிரி வடிவங்களது வரைவு உள்ளடக்கப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக மாதிரி வடிவத்தைத் தீர்மானிகாகாது ஆண்டின்போது 05 சந்தர்ப்பங்களில் ரூபா 1,631,421 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.6.1 ஆம் பந்தியின் பிரகாரம் பொருட் கொள்வனவு நிறுவனத்தால் தயாரிக்கப்படும் கூறுவிலைக் கோரல் ஆவணம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவால் மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஆவணங்கள் வெளியிடப்பட்ட பின்னர் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு நியமிக்கப்பட்ட 04 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,002,062 கொள்வனவின் பொருட்டுப் பயன்படுத்தப்பட்ட கூறுவிலை ஆவணங்கள் மதிப்பாய்வுக் குழுவால் பரிசீலிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.8.4 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு தொழில்நுட்ப மாதிரி வடிவங்களது வேறுபாடுகள் அதிகரிக்குமிடத்து அவை பெருமளவு விலகியவாறு அமைந்திருப்பதாகக் கருதப்பட்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும், தொழில்நுட்ப மாதிரி வடிவங்கள் முறையாக மதிப்பாய்வு செய்யப்படாதும் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி வடிவங்களுக்குப் புறம்பாக 2017 டிசெம்பர் 19 ஆந் திகதியன்று ரூபா 541,650 பெறுமதியான டுப்ளோ மெஷின் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) கல்லூரிக்குச் சொந்தமான ரூபலாவண்ய (Cosmetology) ஆய்வுகூடத்தைப் புனரமைப்பதற்கும் உபகரணங்களைப் பொறுத்துவதற்குமான ரூபா 1,128,840 பொருட் கொள்வனவின்போது கூறு விலைகளைத் திறக்கும் குழு அங்கத்தவர்களை 2017 டிசெம்பர் 09 ஆந் திகதி நியமித்திருந்தபோதும், கூறு விலைகள் 2017 டிசெம்பர் 06 ஆந் திகதியே திறக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் தெளிவாக அமைந்தனவா என்பது கணக்காய்வில் கேள்விக்குறியாகியது.

(ஊ) சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கூறு விலைகளைக் கல்லூரி கோரியிருந்ததுடன், கூறு விலையைச் சமர்ப்பித்த நிறுவனம் அச்சமயம் கல்லூரியில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டவாறுமிருந்தது. எனினும், இந்நிறுவனத்தின் சேவை திருப்திகரமற்றதால் அக் கூறு விலை நிராகரிக்கப்பட்டிருந்தது. மேலும், கூறு விலை ஆவணங்களில் குறித்த வடிவமைப்பு எதனையும் கல்லூரி குறிப்பிட்டிராதபோதும், ரூபா 1,706,400 பெறுமதியான இரண்டாவது அதி குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த நிறுவனத்தின் ஆவணங்களில் இரசாயண மற்றும் ஏனைய உபகரணங்கள் சம்பந்தமாக வழங்கிய தகவல்கள் விபரமாகவும் விளக்கமளிப்பனவாகவும் இருக்கவில்லை எனக் குறிப்பிட்டு அதுவும் நிராகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதி கூடிய கூறுவிலையான ரூபா 2,651,100 ஐச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் முறைப்படி தயாரிக்கப்படாமை, கணக்குப் புத்தகங்களும் பதிவேடுகளும் நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஆ) சொத்து முகாமைத்துவம் | சொத்துக்களை கணக்கிலிடுதலும் பதிவேடுகளைப் பேணாமையும் |
| (இ) பதவியணிக்கான ஆட்சேர்ப்பும் நிர்வாகமும் | பதவியணிக்கான ஆட்சேர்ப்பு முறைப்படி நடவாமை மற்றும் கோவைகளை நாளதுவரையாக்கிப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |